**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், ஆரணி திருவண்ணாமலை மாவட்டம்.**

**அசல் வழக்கு எண்.210/2013**

நாள் - 19.03.2024.

பெயர். திரு.மீனாட்சிசுந்தரம் த/பெ. வெங்கடேசன்.

**பி.வா.சா.1 சத்தியபிரமாணம் செய்யப்பட்டு வாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1. நான் என்ன படித்துள்ளேன் என்றால் நான்காம் வகுப்பு வரை படித்துள்ளேன். நான் என்ன தொழில் செய்து வருகிறேன் என்றால் பட்டு நெசவு தொழில் செய்து வருகிறேன். நான் வழக்கு சொத்தில் ஒரு பகுதியை 3ம் பிரதிவாதி ராஜேந்திரனிடம் இருந்து கிரயம் வாங்கியுளேன் என்றால் சரி தான்.

2. நான் எந்த வருடம் ராஜேந்திரனிடமிருந்து கிரயம் வாங்கினேன் என்றால் 2018ஆம் ஆண்டு கிரயம் வாங்கினேன். நான் கிரயம் வாங்கும்போது இவ்வசல் வழக்கு 2013ஆம் ஆண்டே தாக்கல் செய்யப்பட்டு நிலுவையில் இருந்து வந்துள்ளது என்றால் அது பற்றி எனக்கு தெரியாது.

3. நான் சொத்தை வாங்குவதற்கு முன்பு அனைத்து ஆவணங்களையும் பார்வையிட்டேனா என்றால் பார்வையிட்டேன். ராஜேந்திரன் இவ்வழக்கு சொத்து சம்பந்தமாக நீதிமன்றத்தில் வழக்கு நிலுவையில் இருந்து வருகிறது என்ற விவரத்தை என்னிடம் கூறினாரா என்றால் கூறினார்.

4. வழக்கு நிலுவையில் இருந்தபோது சொத்தை வாங்குவது தவறு என்றால் சரியல்ல. ராஜேந்திரன் மீது எந்த வழக்கும் இல்லை என்பதால் சொத்தை வாங்கினேன். நான் மேற்படி சொத்து சம்பந்தமாக வழக்கு யார் யார் மீது தாக்கல் செய்துள்ளார்கள் என்ற விவரத்தை கேட்டு தெரிந்துக்கொண்டேனா என்றால் தெரிந்துக்கொண்டேன்.

5. நான் அதன்பிறகு வழக்கறிஞரை வைத்து வழக்கு விவரங்களை தெரிந்துக்கொண்டேனா என்றால் தெரிந்துக்கொண்டேன். அதன்பிறகு விவரம் தெரிந்துக்கொண்டு தான் சொத்தை கிரயம் வாங்கினேன் என்றால் சரி தான். நான் கிரயம் வாங்குவதற்கு முன்பாக வழக்கு சொத்தை பார்வையிட்டேனா என்றால் பார்வையிடவில்லை. ராஜேந்திரன் எந்தெந்த மனைகளை எனக்கு கிரயம் கொடுத்தார் என்றால் பத்திரம் பார்த்தால் தான் எனக்கு தெரியும்.

6. நான் கிரயம் வாங்கிய 6 மனைகளின் நீள அகலம் தெரியுமா என்றால் தெரியும், 20x60 அடி அளவு இருக்கலாம். மேற்படி 6 மனைகளும் மொத்தம் 7142 சதுரடி ஆகும். பொதுவாக வீட்டு மனைகளை வாங்கும்போது ஒவ்வொரு மனையும் அளவுகளையும் குறிப்பிட்டு கிரயம் வாங்குவது வழக்கம் என்றால் சரி தான்.

7. நான் வாங்கிய கிரயப்பத்திரத்தில் அவ்வாறு ஒவ்வொரு மனையின் அளவுகளை குறிப்பிடவில்லை என்றால் குறிப்பிட்டுள்ளது. எனக்கு எழுத படிக்க தெரியுமா என்றால் தெரியும். பி.வா.சா.ஆ.7 நான் கிரயம் வாங்கிய பத்திரத்தில் மனை எண்.15 முதல் 20 மனைகளுக்கு தனித்தனியாக அளவுகள் குறிப்பிட்டுள்ளதா என்றால் குறிப்பிடவில்லை.

8. அதேபோல், பி.வா.சா.ஆ.7 கிரயப்பத்திரத்தில் ஒவ்வொரு மனைக்கும் தனித்தனியாக ஜக்பந்தி குறிப்பிடவில்லை என்றால் சரி தான். ராஜேந்திரன் எனக்கு கிரயம் கொடுக்கும்போது மொத்த சொத்திற்கும் வீட்டு மனைகளாக பிரித்திருந்தாரா என்றால் ஆமாம். நான் மேற்படி வீட்டு மனைகளின் மொத்த வரைபடத்தை வாங்கி பார்த்தேனா என்றால் பார்த்தேன்.

9. நான் பார்த்த வரைபடத்தை இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா

என்றால் என் வழக்கறிஞரிடம் கொடுத்துள்ளேன், தாக்கல் செய்துள்ளாரா என்று எனக்கு தெரியாது. ராஜேந்திரன் எந்த வருடம் வீட்டு மனை போட்டார் என்றால் முதலில் சிவக்குமார் மனை போட்டிருந்தார். அதை ராமலிங்கம் வாங்கி அதன்பிறகு ராஜேந்திரன் வாங்கினார்.

10. ராமலிங்கம் ராஜேந்திரனுக்கு எழுதி வைத்த தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் ஏற்கனவே வீட்டு மனைகள் போடப்பட்டுள்ளது என்றும், அதை தானமாக வழங்குகிறேன் என வாசகம் குறிப்பிட்டுள்ளது என்றால் சரி தான். மேற்படி தானசெட்டில்மெண்ட் ஆவணத்தை படித்து பார்த்தேனா என்றால் படித்து பார்த்தேன்.

11. பி.வா.சா.ஆ.6 ராமலிங்கம் ராஜேந்திரனுக்கு எழுதி வைத்த தானசெட்டில்மெண்ட் பத்திரத்தில் மேற்படி வீட்டு மனைகள் பிரிக்கப்பட்டு தானமாக கொடுக்கப்பட்டுள்ளதாக வாசகம் கண்டுள்ளதா என்றால் பி.வா.சா.ஆ.6 தான செட்டில்மெண்ட் பத்திரத்தில் மொத்தம் 6 வீட்டு மனைகள் மட்டும் தான் குறிப்பிடப்பட்டுள்ளது.

12. பி.வா.சா.ஆ.6 தான செட்டில்மெண்ட் பத்திரத்திலும் ஒவ்வொரு வீட்டு மனையின் அளவு மற்றும் ஐக்பந்தி குறிப்பிடவில்லை என்றால் சரி தான். மேற்படி 6 வீட்டு மனைகளும் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்ட வீட்டு மனைகளா என்றால் ஆமாம். அவ்வாறு அரசாங்கத்தால் அங்கீரிக்கப்பட்ட வீட்டு மனை என உத்தரவு ஏதேனும் தாக்கல் செய்துள்ளேனா என்றால் என் வழக்கறிஞருக்கு தான் தெரியும்.

13. நான் ராஜேந்திரனுக்கு உறவினரா என்றால் இல்லை. நான் தாக்கல் செய்த எதிர்உரையில் வீட்டு மனைகள் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்பட்டது என குறிப்பிட்டு சொல்லியுள்ளேனா என்றால் ஞாபகம் இல்லை. நான் எனது

எதிர் உரையில் அவ்வாறு அங்கீகரிக்கப்பட்ட வீட்டு மனைகள் என குறிப்பிட்டு சொல்லவில்லை என்றாலும், மேலும் அரசாங்கத்தால் அங்கீரிக்கப்படாத வீட்டு மனைகள் என்றால் சரியல்ல.

14. பொதுவாக நிலத்தை வீட்டு மனைகளாக மாற்றவேண்டும் என்றால் அனுமதி பெறவேண்டும் என்றால் சரி தான். நான் வாங்கிய மனைகள் அரசாங்கத்தால் அங்கீகரிக்கப்படாத மனைகள் என்றாலும், நான் வழக்கிற்காக அங்கீகரிக்கப்பட்டதாக பொய் சொல்கிறேன் என்றால் சரியல்ல.

(வாதிகள் தரப்பு வழக்கறிஞர் வேண்டுகோளுக்கிணங்க குறுக்கு விசாரணை ஒத்திவைக்கப்படுகிறது).

ஒப்/- பி.டி. சதீஷ்குமார்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி, ஆரணி.